பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
04. 02 .2025 7. 15
செவ்வாய்க்கிழமை காலை
ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. 2 ஆயிரம் ரூபாய் நோட்டுகளை வைத்திருக்கும் பொதுமக்கள் ரிசர்வ் வங்கியிடம் ஒப்படைக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

2. தில்லி சட்டப்பேரவைத் தேர்தல் நாளை நடைபெறுகிறது.

3. உத்தரப்பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகா கும்பமேளாவில் இன்று பூடான் மன்னர் **Jigme Wangchuck** கலந்துகொள்கிறார்.

4. மெக்சிகோ நாட்டுக்கு விதிக்கப்பட்ட 25 சதவீத இறக்குமதி வரிவிதிப்பை ஒருமாத காலத்திற்கு நிறுத்தி வைப்பதாக அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

5. தேசிய விளையாட்டுப்போட்டிகளில் பஞ்சாபை சேர்ந்த சிஃப்ட் கவுர் சம்ரா மகளிர் 50 மீட்டர் ரைஃபிள் போட்டியில் தங்கப்பதக்கம் வென்றுள்ளார்.

*---- இனி விரிவான செய்திகள் ----*

<<<<>>>>

நாட்டில் 2 ஆயிரம் ரூபாய் நோட்டுகளின் புழக்கம் கடந்த மாதம் 31ஆம் தேதி வரை 6 ஆயிரத்து 677 கோடி ரூபாய் மட்டுமே இருப்பதாக ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

98 புள்ளி ஒன்று ஐந்து சதவீதம் அளவுக்கு அதாவது 3 புள்ளி ஐந்து ஆறு லட்சம் கோடி ரூபாய் 2023ஆம் ஆண்டு மே மாதம் வரை புழக்கத்தில் இருந்ததாகவும், அவை தற்போது ரிசர்வ் வங்கியில் பெறப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2023ஆம் ஆண்டு மே 19ஆம் தேதி 2 ஆயிரம் ரூபாய் நோட்டுகள் இனிமேல் புழக்கத்தில் இருக்காது என்று அறிவிக்கப்பட்ட பின்னர், அந்த ஆண்டு அக்டோபர் 7ஆம் தேதிக்குள் வங்கிகளில் அவற்றை ஒப்படைக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து பெரும்பாலான 2 ஆயிரம் ரூபாய் நோட்டுகள் வங்கிகளில் ஒப்படைக்கப்பட்டது.

இன்னும் 2 ஆயிரம் ரூபாய் நோட்டுகளை வைத்திருக்கும் பொதுமக்கள் இவற்றை வங்கிக் கணக்கில் செலுத்தவோ அல்லது மாற்றவோ, இந்திய தபால்துறை மூலம் ரிசர்வ் வங்கி அலுவலகங்களை அணுகலாம் என்று ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது.

<<<<>>>>

ஜம்மு-கஷ்மீரில் குலாம் மாவட்டத்தில் முன்னாள் ராணுவ வீரர் ஒருவரை தீவிரவாதிகள் சுட்டுக்கொன்றனர்.

தீவிரவாதிகள் அவரது மனைவி மற்றும் மகளையும் துப்பாக்கிசால் சுட்டு தப்பியோடினர்.

காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

இதில் முன்னாள் ராணுவ வீரர் உயிரிழந்தார். அவருடைய மனைவி மற்றும் மகளுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும், இருவரின் உடல்நிலை சீராக உள்ளதாகவும் மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனையடுத்து அந்தப் பகுதியில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த தாக்குதலுக்கு அம்மாநில துணைநிலை ஆளுநர் திரு. மனோஜ் சின்ஹா மற்றும் முதலமைச்சர் திரு. உமர் அப்துல்லா ஆகியோர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

<<<<>>>>

இந்நிலையில், ஜம்மு-கஷ்மீரின் பாதுகாப்பு நிலவரங்கள் குறித்து உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தலைமையில் ஆய்வுக் கூட்டம் இன்று நடைபெறுகிறது.

புதுதில்லியில் நடைபெறும் இக்கூட்டத்தில் ஜம்மு-கஷ்மீர் துணைநிலை ஆளுநர் திரு. மனோஜ் சின்ஹா, உள்துறை செயலாளர் திரு. கோவிந்த் மோகன், நுண்ணறிவு பிரிவு மற்றும் உளவுத்துறை தலைமை அதிகாரிகள் மற்றும் பிறதுறை சார்ந்த உயரதிகாரிகள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்கின்றனர்.

<<<<>>>>

தில்லி சட்டப்பேரவைத் தேர்தல் நாளை நடைபெறுகிறது.

இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

வாக்குப்பதிவு நாளை காலை 7 மணிக்கு தொடங்கி மாலை 6 மணிக்கு முடிவடைகிறது.

70 தொகுதிகளுக்கான இந்தத் தேர்தலில், 699 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

ஒரு கோடியே 56 லட்சம் வாக்காளர்கள் வாக்களிக்க உள்ளனர்.

அங்கு நேற்று மாலையுடன் தேர்தல் பிரச்சாரம் நிறைவடைந்தது.

வரும் சனிக்கிழமையன்று வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன.

தேர்தலை சுமுகமாக நடத்துவதற்கு சுமார் 2 லட்சம் பேர் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

இதுவரை 57 கோடி ரூபாய் ரொக்கம் மற்றும் 163 கோடி ரூபாய் அளவிற்கான மதுபாட்டில்கள், இலவச பரிசுப் பொருட்கள் ஆகியவை கைப்பற்றப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதனிடையே தமிழகத்தில் ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் நாளை நடைபெற உள்ள நிலையில், தேவையான அனைத்து முன்னேற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாகவும், நாளை காலை 7 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கும் என்றும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இடைத்தேர்தல் நடைபெறுவதை ஒட்டி அந்தத் தொகுதியில் பாதுகாப்புப் பணிகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

<<<<>>>>

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள்...

உத்தரப்பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகா கும்பமேளாவில் இன்று பூடான் மன்னர் **Jigme Khesar Namgyel Wangchuck** கலந்துகொள்கிறார்.

இதற்காக அவர் நேற்று லக்னோ வந்தடைந்தார்.

மூன்று நதிகள் சங்கமிக்கும் திரிவேணி சங்கமத்தில் அவர் புனித நீராடுகிறார்.

அதன் பின்னர் மகா கும்பமேளாவில் டிஜிட்டல் தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுவதை பார்வையிடுகிறார்.

இந்த நிகழ்ச்சியில் உத்தரப்பிரதேச மாநில முதலமைச்சர் திரு. யோகி ஆதித்யநாத் கலந்துகொள்கிறார்.

இதுவரை 71 நாடுகளைச் சேர்ந்த தூதரக உயரதிகாரிகள் பங்கேற்றுள்ளனர்.

மகா கும்பமேளாவில் இதுவரை 37 கோடி பேர் புனித நீராடியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

மெக்சிகோ நாட்டில் இருந்து அமெரிக்காவுக்குள் அத்துமீறி நுழைவதைத் தடுப்பதற்கு அந்நாட்டு அரசு நடவடிக்கை எடுத்து வருவதை அடுத்து ஒருமாத காலத்திற்கு 25 சதவீத வரிவிதிப்பை நிறுத்தி வைப்பதாக அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

மெக்சிகோ நாட்டு அதிபருடன் நட்புரீதியாக தொலைபேசியில் உரையாடியதாகவும், அப்போது அவர் 10 ஆயிரம் படைவீரர்களை அமெரிக்கா – மெக்சிகோ எல்லைப் பகுதியில் அனுப்பி சட்டவிரோத அமெரிக்காவுக்குள் தடுத்து நிறுத்தப்படுவார்கள் என்று உறுதி அளித்ததாகவும், இதனையடுத்து, மெக்சிகோவில் இருந்து வரும் பொருட்களுக்கான 25 சதவீத வரிவிதிப்பு தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படுவதாக அவர் கூறியுள்ளார்

<<<<>>>>

இலங்கை கடற்படையினரால் இந்திய மீனவர்கள் கைது செய்யப்படுவதை தடுக்க வேண்டும் என்று கூறி, வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கருக்கு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

அவர் எழுதியுள்ள அந்த கடிதத்தில், ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் மீன்பிடி துறைமுகத்தில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற 10 மீனவர்களை இலங்கை கடற்படையினர் நேற்று கைது செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

மீனவர்களையும், அவர்களது படகுகளையும் விடுவித்திட உடனடியாக தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலும் கடந்த 27 நாட்களில் 5 வெவ்வேறு சம்பவங்களில் தமிழ்நாட்டைச் சேர்ந்த 63 மீனவர்கள் மற்றும் 5 மீன்பிடி படகுகள் இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ளதை குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஆண்டில் 36 வெவ்வேறு சம்பவங்களில் 530 மீனவர்கள் மற்றும் 71 மீன்பிடி படகுகள் சிறைபிடிக்கப்பட்டுள்ளதையும் தமது கடிதத்தில் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போது இலங்கை சிறையில் உள்ள 97 மீனவர்களும், கைப்பற்றப்பட்டுள்ள 216 மீன்பிடி படகுகளும் மீட்கப்பட வேண்டும் என்று முதலமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

இந்திய மீனவர்கள் இதுபோன்று கைது செய்யப்படுவதை நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் திரு. ஜெய்சங்கரைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

இந்திய மகளிர் தலைமையிலான புத்தொழில் நிறுவனங்கள் உலக அளவில் முத்திரையைப் பதித்து வருவதாக மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

இந்திய வர்த்தக சபை கூட்டமைப்பு பெண்கள் பிரிவு பிரதிநிதிகளுடன் புதுதில்லியில் அவர் கலந்துரையாடினார்.

அப்போது பேசிய அவர், விண்வெளி துறையில் மகளிர் தலைமையிலான திட்டங்கள் உலக அளவில் பாராட்டப்பட்டுள்ளது என்று கூறினார்.

இஸ்ரோவின் சூரியப் பெண் என்று அறியப்படும் திருமதி நிகர் சாஜி தலைமையிலான ஆதித்யா-எல்1 திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டதை அவர் சுட்டிக்காட்டினார்.

மகளிர் தலைமையிலான புத்தொழில் நிறுவனங்கள் வரும் ஆண்டுகளில் இந்தியாவை உலக வரைபடத்தில் இடம்பெறச் செய்யும் என்றும், பெண் தொழில்முனைவோர் அந்த இலக்கை அடையும் ஆற்றலை கொண்டுள்ளதாகவும் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

<<<<>>>>

ரயில்வே துறையில் 100 அம்ரித் பாரத் ரயில்கள், 50 நமோ பாரத் ரயில்கள், 200 வந்தேபாரத் ரயில்கள் விரைவில் அறிமுகப்படுத்தப்படும் என்று மத்திய ரயில்வே அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், வந்தே பாரத் ரயிலில் இருக்கை வசதி மற்றும் படுக்கை வசதி உள்ள ரயில்கள் அறிமுகப்படுத்தப்படும் என்றும் கூறினார்.

இந்த ரயில்கள் அடுத்த 2, 3 ஆண்டுகளில் இந்தியாவின் ரயில்வே தடங்களில் அறிமுகப்படுத்தப்படும் என்று அவர் கூறினார்.

இந்த நிதியாண்டில் ரயில்வே துறைக்காக மத்திய பட்ஜெட்டில் 2 புள்ளி ஐந்து இரண்டு லட்சம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், இதில் ஒரு லட்சத்து 16 ஆயிரம் கோடி ரூபாய் ரயில்வே பாதுகாப்பு பணிகளுக்கு ஒதுக்கபப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

<<<<>>>>

தேசிய விளையாட்டுப்போட்டிகளில் பஞ்சாபை சேர்ந்த சிஃப்ட் கவுர் சம்ரா மகளிர் 50 மீட்டர் ரைஃபிள் போட்டியில் தங்கப்பதக்கம் வென்றுள்ளார்.

டேராடூனில் நடைபெற்று வரும் பல்வேறு போட்டிகளில் ஆடவருக்கான 10 மீட்டர் பிஸ்டல் போட்டியில் கர்நாடகாவின் ஜோனதன் ஆண்டனி தங்கப்பதக்கம் பெற்றுள்ளார்.

பதக்கப்பட்டியலில் சர்வீஸஸ் அணி தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது.

கர்நாடகா இரண்டாவது இடத்திலும், மகாராஷ்டிரா மூன்றாவது இடத்திலும் உள்ளன.

<<<<>>>>

சிங்கப்பூரில் நடைபெற்று வரும் உலக டேபிள் டென்னிஸ் ஸ்மாஷ் போட்டியில் இந்தியாவின் கலப்பு இரட்டையர் பிரிவில் மனுஷா தியா -சிட்டாலே இணை மெக்சிகோவின் **MARCOS MADRID** மற்றும் **Arantxa Cossio** இணையை எதிர்த்து இன்று காலிறுதிக்கு முந்தைய சுற்றில் விளையாடுகிறது.

இப்போட்டி இந்திய நேரப்படி மாலை மணி 3.30 மணிக்கு தொடங்கும்.

மற்றொரு ஆட்டத்தில் **Ayhika Mukherjee** மற்றும் **Sutirtha Mukherjee** இணை, தாய்லாந்து இணையை எதிர்கொள்கிறது.

<<<<>>>>

சென்னை ஓபன் டென்னிஸ் போட்டியில் இத்தாலியின் **Jacopo Berettine** அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

அவர் ஜப்பானின் **Sho Shimabukuro**-ஐ 6-3, 7-6 என்ற செட் கணக்கில் தோற்கடித்தார்.

மற்றொரு ஆட்டத்தில் ஜப்பானின் **Shintaro Mochizuki** இத்தாலியின் **Enrico Dalla Valle-**ஐ 6-2, 6-1 என்ற செட கணக்கில் தோற்கடித்தார்.

நேற்று நடைபெற்ற தகுதிச் சுற்றுப் போட்டிக்கான இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் 4 வீரர்களும் தோல்வியை தழுவினர்.

**<<<<>>>>**

மும்பையில் நடைபெற்று வரும் மகளிருக்கான டென்னிஸ் போட்டியில் கனடா நாட்டின் **Rebecca Marino** செக் குடியரசின் **Sara Bejlek**-ஐ 6-0, 6-2 என்ற செட் கணக்கில் வென்றார்.

இந்திய வீராங்கனை **Sahaja Yamalapalli** தாய்லாந்தின் **Lanlana Tararudee-**யிடம் 6-3, 4-6, 6-1 என்ற செட் கணக்கில் தோல்வியடைந்தார்.

**<<<<The End>>>>**